உரு *B* இல் காட்டப்பட்டுள்ளவாறு கிடைத்தளத்துடன் 45° சாய்வான தளமொன்றின் ஊடாக இந்தக் கூம்பகம் வெட்டப்பட்டது. அதன்போது அடியிலிருந்து அச்சின் ஊடாக 50mm நிலைக்குத்து உயரத்தில் சாய்வான தளத்தின் வழியே வெட்டப்பட்டுள்ளது.

(a) சாய்வான தளத்தின் வழியே வெட்டப்பட்ட சதுரக் கூம்பகத்தின் திட்டப்படத்தை வரைக.



அளவீட்டைக் கருத்தில் கொள்ளாது உருவ அமைப்புக்கு புள்ளிகளை வழங்குக.

(30 புள்ளிகள்)

Download Marking Schemes at : www.freebooks.lk

(b) இந்த வெட்டுமுகத்தின் உண்மையான வடிவத்தை வரைக.



(30 புள்ளிகள்)

(c) தரப்பட்டுள்ள சதுரக் கூம்பகத்தின் விரியலை வரைக.



(30 புள்ளிகள்)

150

Download Marking Schemes at : www.freebooks.lk

4. வாகனமொன்றினை வடிவமைத்தல் தொடர்பான, மாணவர்களுக்கான போட்டியொன்றிற்கென பின்வரும் உருவில் காட்டப்பட்டவாறான அகத்தகன (IC) எஞ்சினைக் கொண்ட சிறிய நான்கு சக்கர செலுத்துகை வாகனமொன்றினை வடிவமைப்புச் செய்தல், விருத்திசெய்தல் ஆகியன மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.



(*a*) இந்த வாகனத்தை திட்டமிடும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய பிரதான தொகுதிகள் **மூன்றைக்** குறிப்பிடுக.

வலு ஊடுகடத்தும் தொகுதி, கடவுத்தொகுதி, தடுப்புத் தொகுதி

எவையேனும் மூன்று பிரதான தொகுதிகள் **(04 × 3 = 12 புள்ளிகள்)**

(*b*) இந்த வாகனத்துக்கெனப் பயன்படுத்தக்கூடிய பிரதான எஞ்சின் வகைகள் **இரண்டும்** யாவை? அவற்றின் அனுகூலங்கள், பிரதிகூலங்கள் **இரண்டு** வீதம் குறிப்பிடுக.

இரு அகத் தகன எஞ்சின் வகைகள், ஈரடிப்பு மற்றும் நான்கடிப்பு எஞ்சின்கள்.

அல்லது

தீப்பொறி எரிபற்றல் (பெற்றோல்) எஞ்சின் மற்றும் நெருக்கல் எரிபற்றல் (டீசல்) எஞ்சின் எனக் குறிப்பிட்டு இருப்பின்

(04 × 2 = 08 புள்ளிகள்)

(*c*) கீழேயுள்ள உருவில் காட்டப்பட்டுள்ள அகத்தகன எஞ்சினில் A, B, C, D எனக் குறிக்கப்பட்டுள்ள பகுதிகளைப் பெயரிடுக.



A - வால்வு

B - உள்ளீடு/ வெளிவிடு குழாய்வழி / பல்கிளையம்

C - தொடுக்கும் கோல்/ இணைப்புத்தண்டு

D - மாற்றித் தண்டு / சுழற்றித் தண்டு

(05 × 4 = 20 புள்ளிகள்)

Download Marking Schemes at : www.freebooks.lk

(d) இந்த வாகனமானது பின்வருமாறு மூன்று வேகங்களுடனான ஊடுகடத்தல் தொகுதி கொண்டதாக வடிவமைக்கப்பட வேண்டும்.

	விபரம்	வலுப்பாய்ச்சல்
1ம் கியர்	கியர் A, கியர் B யுடன் இணைக்கப்படுமாறு பெயர்க்கப்பட்டுள்ளது	$E \rightarrow F \rightarrow B \rightarrow A$
2ம் கியர்	கியர் D, கியர் C யுடன் இணைக்கப்படுமாறு பெயர்க்கப்பட்டுள்ளது	$E \rightarrow F \rightarrow C \rightarrow D$
3ம் கியர்	கியர் D, கியர் E யிலுள்ள பிடிப்பற்களுடன் பொருந்துமாறு பெயர்க்கப்பட்டுள்ளது	$E \rightarrow D$



(i) 1ம் கியர் தொழிற்படுநிலையில் உள்ள போது எஞ்சின் அச்சுத் தண்டின் கோண வேகம் 1800 rpm. எனில் சக்கரங்களுடன் தொடர்பான அச்சுத்தண்டின் கோண வேகத்தைத் துணிக.

Download Marking Schemes at : www.freebooks.lk

$$\frac{\text{F இன் சுழற்சிக் கதி}}{\text{E இன் சுழற்சிக் கதி}} = \frac{\text{E இன் பற்களின் எண்ணிக்கை}}{\text{F இன் பற்களின் எண்ணிக்கை}}$$

$$\text{F இன் சுழற்சிக் கதி} = \frac{16}{32} \times 1800 \text{ rpm}$$

$$= 900 \text{ rpm} = \text{B இன் சுழற்சிக் கதி}$$

$$\frac{\text{A இன் சுழற்சிக் கதி}}{\text{B இன் சுழற்சிக் கதி}} = \frac{\text{B இன் பற்களின் எண்ணிக்கை}}{\text{A இன் பற்களின் எண்ணிக்கை}}$$

$$\text{A இன் சுழற்சிக் கதி} = 900 \times \frac{20}{28} \text{ rpm}$$

= சில்லு அச்சுத்தண்டின் சுழற்சிக் கதியாகும்

$$\therefore \text{ சில்லு அச்சுத் தண்டின் சுழற்சிக் கதி} = \frac{9000}{14} \text{ rpm}$$

(10 புள்ளிகள்)

(ii) 2 வது கியர் இடப்பட்டுள்ளபோது சில்லுகளோடு தொடர்பான அச்சுத் தண்டின் கோண வேகம் 150 rpm எனில் எஞ்சின் அச்சுத் தண்டின் கோண வேகத்தைத் துணிக.

$$\text{D இன் சுழற்சிக் கதி} = 150 \text{ rpm}$$

$$\frac{\text{C இன் சுழற்சிக் கதி}}{\text{D இன் சுழற்சிக் கதி}} = \frac{\text{D இன் பற்களின் எண்ணிக்கை}}{\text{C இன் பற்களின் எண்ணிக்கை}}$$

= F இன் சுழற்சிக் கதி

$$= 150 \times \frac{22}{26} \times \frac{32}{16}$$

$$\frac{\text{E இன் சுழற்சிக் கதி}}{\text{F இன் சுழற்சிக் கதி}} = \frac{\text{F இன் பற்களின் எண்ணிக்கை}}{\text{E இன் பற்களின் எண்ணிக்கை}}$$

$$= 150 \times \frac{22}{13}$$

$$\therefore \text{ கிளச் (பிடி) அச்சுத் தண்டின் சுழற்சிக் கதி} = \frac{3300}{13} \text{ rpm}$$

(10 புள்ளிகள்)

150

Download Marking Schemes at : www.freebooks.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව/පැරණි නිර්දේශය – புதிய/பழைய பாடத்திட்டம் – New/Old Syllabus

NEW/OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

යාන්ත්‍රික තාක්ෂණවේදය II
பொறிமுறைத் தொழினுட்பவியல் II
Mechanical Technology II

15 T II

கட்டுரை

✻ பகுதி B பகுதி C ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இரு வினாக்கள் வீதம் தெரிவுசெய்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.
(ஒவ்வொரு வினாவுக்கும் 15 புள்ளிகள் உரித்தாகும்.)

பகுதி B

5. கொவிட்- 19 என்பது அண்மைக்காலமாக முழு உலகிற்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள தொற்று நிலைமையாகும். இத்தொற்றுக் காலப்பகுதியில் வைரசின் பரவுதலைத் தடுப்பதற்கென பல்வேறு வகைப்பட்ட தொழினுட்ப, தொழினுட்பம் சாரா படிமுறைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(*a*) கொவிட்- 19 பரவலைத் தடுப்பதற்கு சமூக இடைவெளியைப் பேணுதலை எவ்வாறு பயன்படுத்தலாமெனச் சுருக்கமாக விளக்குக?

(*b*) வைரசுப் பரவலைத் தவிர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட தொழினுட்பம் சாராத வேறு முறைகள் **இரண்டைச்** சுருக்கமாக விளக்குக.

(*c*) வைரசுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்தக்கூடிய நவீன தொழினுட்பப் பிரயோகங்கள் **மூன்றை** விவரிக்குக.

6. இலங்கையில் கலப்பு சக்தி வலு வழங்கலில் மீளப்புதுப்பிக்கத்தக்க சக்திவலு வழங்கும் கூறுகளை அதிகரிப்பதற்கென ஞாயிற்று வோல்ற்றுப் பிறப்பாக்கி நிலையங்கள் (Solar PV Plants) விருத்தி செய்யப்படுகின்றன. ஞாயிற்று ஒளிவலுப் பிறப்பாக்கி நிலையங்களில் குறைவான கொள்ளளவு கொண்ட அனேக எண்ணிக்கையான ஞாயிற்றுப் படல் அலகுகள் ஒன்றுடனொன்று இணைக்கப்பட்டிருக்கும். ஒளிர்வு வோல்ற்று மொடியூலொன்றின் பயப்பு வோல்ற்றளவானது, கிடைக்கும் சூரியஒளியின் அளவில் தங்கியிருக்கும். மொடியூலொன்று பெயரளவு வலுவையும் உச்ச பயப்பு வோல்ற்றளவையும் கொண்டிருக்கும். தேவையான மின்னோட்ட, வோல்ற்றளவுப் பயப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கு இந்த அலகுகள் தொடராகவோ சமாந்தரமாகவோ இணைக்கப்படலாம். ஞாயிற்று மொடியூல்கள் பலவற்றின் பயப்பு நேரோட்டம், ஆடலோட்டமாக மாற்றப்படும் மாற்றியுடன் தொடுக்கப்பட்டு பின்னர் நிலைமாற்றியினால் உரிய நெய்யரி வோல்ற்றளவுக்கு மாற்றப்படும். (கீழே தரப்பட்ட விவரப்படத்தைக் கருதுக.)



சூரிய ஒளிர்வு வோல்ற்றளவு மொடியூலொன்றின் தரவு (ஒரு அலகுக்கானது)
வலு: 200 W
வோல்ற்றளவு V_{max} : 50 V

(*a*) 50KW ஞாயிற்று ஒளிர்வு வோல்ற்றுப் பிறப்பாக்கல் நிலையத்துக்குப் பயன்படுத்தப்பட வேண்டிய ஞாயிற்றுப் படல்களின் எண்ணிக்கையைக் கணிக்க.

(*b*) ஞாயிற்று ஒளிர்வு வோல்ற்று அலகொன்றின் அகலம், நீளம் ஆகியன முறையே 34", 52" எனக் கொண்டு இந்த வலு பிறப்பாக்கல் நிலையத்தை நிறுவத் தேவையான மொத்தப் பரப்பளவைக் கணிக்க.

Download Marking Schemes at : www.freebooks.lk

(*c*) நேரோட்டத்தை ஆடலோட்டமாக மாற்றீடு செய்யும் மாற்றிக்கு 500 V நேரோட்ட மின்னழுத்தம் தேவையாகும். தரப்பட்ட ஒளி வோல்ற்றளவு (PV) மொடியூலின் மூலம் தேவைப்படும் நேரோட்ட வோல்ற்றளவைப் பெறுவதற்கான முறையைப் பிரேரிக்க

(*d*) பிரதான நெய்யரியிலிருந்து இரவில் மின் கிடைக்காத சந்தர்ப்பத்தில் சூரியவலுப் பிறப்பாக்கியின் மூலம் மின் வழங்கலை மேற்கொள்ளக் கூடிய முறையொன்றைப் பிரேரிக்க.

(*e*) ஞாயிற்று ஒளிர்வு வோல்ற்றுப் பிறப்பாக்கி நிலையங்கள் மூலம் இலங்கைக்குக் கிடைக்கும் நன்மைகள் இரண்டை விவரிக்குக.

7. இலங்கையில் பிளாத்திக்குக் கழிவுகளின் உற்பத்தி மற்றும் அவை பாதுகாப்பற்ற முறையில் அகற்றப்படுதல் ஆகியன பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. நாம் உணவுகளைப் பொதியிடவெனப் பாதுகாப்பான பிளாத்திக்குப் பதார்த்தங்களைப் பயன்படுத்துகின்ற போதும் அவற்றிலுள்ள பொலிகாபனேற்றுச் சேர்வைகள், கட்டுப்பாடற்ற வகையில் கழிவுகள் குவிக்கப்படும் இடங்களில் அபாயமான இரசாயனப் பதார்த்தங்களுடன் பிணைப்பில் ஈடுபடக்கூடிய தன்மையைக் கொண்டுள்ளன. அவற்றிலிருந்து உருவாகும் திரவப் பதார்த்தங்கள் மற்றும் நுண் பிளாத்திக்குகள் ஆகியன கழுவியெடுத்து வரப்பட்டு நிலக்கீழ் நீர்மூலங்களையும் கடல் சூழலையும் மாசடையச் செய்கின்றன. இந்த மாசுக்கள் உணவுச் சங்கிலிகளினூடாக மனிதனையும் பிற விலங்குகளையும் சென்றடையலாம்.

1988ஆம் ஆண்டில் பிளாத்திக்குக் கைத்தொழில்துறை மூலமாகத் தயாரிக்கப்பட்ட வகைப்படுத்தல் முறைமை வருமாறு

பிளாத்திக்குப் பதார்த்தங்களிலுள்ள மீள்சுழற்சிக் குறியீடுகள் குறிப்பன யாவை?

PET, PETE
(Polyethylene Terephthalate)
- குளிர்பானங்கள், நீர மற்றும் சலாது அலங்கரிப்புகள் இடப்படும் போத்தல்கள் நிலக்கடலை பட்டர், ஜாம் ஆகியவற்றுக்கான கொள்கலன்கள்
- குளிர்நிலை அல்லது சூடான பானங்களை சேமிப்பதற்குப் பொருத்தமானதாகும்.

HDPE
(High-density Polyethylene)
- நீர்க்குழாய்கள், பால், பழச்சாறு, நீர்ப்போத்தல்கள், சில்லறை விற்பனை உறைகள், சில வகை கேச அழுக்ககற்றிப் போத்தல்கள்

PVC
(Polyvinyl Chloride)
- உணவுகளைப் பொதியிடப் பயன்படுத்தப்படாது
- குழாய்கள், வயர்கள், தளபாடங்கள், புடைவைகள், விளையாட்டுப் பொருள்கள்

LDPE
(Low-density Polyethylene)
- குளிரூட்டப்பட்ட உணவுப் பைகள் நெருக்கப்படக்கூடிய போத்தல்கள்
உதா: தேன், கடுகு. உறுதியான பிணைப்புக் கொண்ட மறைப்புகள் நெகிழ்தன்மை கொண்ட மூடிகள்

PP
(Polypropylene)
- மீளப் பயன்படுத்தக்கூடிய நுண்ணலைப் பாத்திரங்கள், சமையலறை உபகரணங்கள் யோக்கட் கோப்பைகள், பயன்படுத்திய பின்னர் கழிக்கப்படும் நுண்ணலைப் பொதிகள், பயன்படுத்திய பின்னர் அகற்றப்படும் கிண்ணங்கள், பீங்கான் தட்டுகள்

PS
(Polystyrene)
- முட்டைப் பொதிகள், நிலக்கடலைப் பொதிகள், பயன்படுத்திய பின்னர் கழிக்கப்படும் கிண்ணங்கள், தட்டுகள், கரண்டி, முள்ளுக்கரண்டி, கத்தி, பயன்படுத்திய பின்னர் கழிக்கப்படும் பொதிகள், உணவைச் சேமிக்கும் பீங்கான் வட்டு

Other
(Often Polycarbonate or ABS)
- மென்பானப் போத்தல்கள், சூப்புப் போத்தல், இறுவட்டு, நொருங்காத கண்ணாடி, வில்லைகள், மூக்குக் கண்ணாடி, மோட்டார் வண்டியின் தலைமை விளக்கு, பெயர்ப்பலகை

http://nowsaveouplanet.blogspot.com/2015/07
/what-types-of-plastics-can-be-recycled.html

ஒவ்வொரு பிளாத்திக்கு வகையினதும் மீள்சுழற்சி செய்யக்கூடிய விகிதம், இலக்க அதிகரிப்புடன் குறையும். இது பயன்பாடு, சேகரிப்பு, தொழினுட்பம், கையாளலுக்கான செலவு ஆகியவற்றில் தங்கியிருக்கும். இவ்வாறு ஒவ்வொரு வகையினதும் மீள்சுழற்சி செய்யப்பட்ட விளைவுகள் வேறு உற்பத்திகளுக்கான மூலப்பொருட்களாகப் பயன்படுத்தப்பட வேண்டும். விருத்தியடைந்த நாடுகளில் இந்த ஒவ்வொரு வகையினதும் மீள்சுழற்சி வீதம் ஏறத்தாழ 20-40% ஆகும். சிறுபகுதி எரியூட்டப்பட்டு சக்தி பிறப்பிக்கப்படுவதுடன் பெரும்பகுதி கட்டுப்பாடற்ற நிலநிரப்பலுக்குப் (land fill) பயன்படுத்தப்படும் அல்லது கடலில் சேர்க்கப்படும்.

(i) மேற்குறித்த வகைப்படுத்தலின் அடிப்படையில் உங்களது உள்ளூராட்சிச் சபைப் (பிரதேச சபை / நகர சபை / மாநகர சபை) பிரதேசத்தில் உருவாகும் வெவ்வேறான கழிவுகளை வகைப்படுத்துக.

(ii) இந்த ஒவ்வொரு கழிவையும் கையாளும் விதம் பற்றி உங்களது உள்ளூராட்சிச் சபைக்குப் பிரேரிக்குக. அவ்வவ் பிரேரணைகளை நடைமுறைப்படுத்துவதால் சமூகத்துக்கு செலவின ரீதியாக ஏற்படக்கூடிய தாக்கங்களை இனங்காண்க.

(iii) பிளாத்திக்கு அல்லாத மாற்றுப் பொருள்களை குறிப்பிடத்தக்களவு பயன்படுத்துவதற்கும் பிளாத்திக்குப் பாவனையைக் குறைப்பதற்கும் உங்களது சமூகத்தை ஊக்குவிக்கக்கூடிய உபாய முறைகள் மூன்றைக் குறிப்பிடுக.

Download Marking Schemes at : www.freebooks.lk

பகுதி C

8. வாகனத் தயாரிப்புச் செயன்முறையை தன்னியக்கமயப்படுத்துவதற்கென, வாகனத் தயாரிப்புத் தொழிற்சாலைகளில் றோபோக்கள் பயன்படுத்தப்படுகின்றன. வாகன உற்பத்தித் தொழிற்சாலையொன்றில் வேலையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தனித்தளத்தில் மட்டும் செயற்படும் அவ்வாறான றோபோ ஒன்று உருவில் காட்டப்பட்டுள்ளது. அது a_1, a_2, a_3 ஆகிய நீளங்களையுடைய மூன்று இணைப்புக்களைக் (Links) கொண்டுள்ளது. தரப்பட்டுள்ள கொண்ணிலையில் மூட்டுகளின் கோணங்கள் θ_1, θ_2, θ_3 ஆகும்.



(a) வாகனத் தயாரிப்புத் தொழிற்சாலையொன்றில் தன்னியக்கமயப்படுத்தப்படக் கூடிய உற்பத்திச் செயன்முறைகள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(b) வாகனத் தயாரிப்புச் செயன்முறையைத் தன்னியக்கமயப்படுத்துவதால் கிடைக்கும் அனுகூலங்கள் **மூன்றைச்** சுருக்கமாக விளக்குக.

(c) தரப்பட்ட நீளங்கள், கோணங்கள் ஆகியவற்றுக்கமைய தனித்தளத்தில் செயற்படும் ரோபோவின் விளைவாக்கி அந்தத்தின் (End effector) பின்வரும் மாறிகளைத் துணிக.

(i) x இன் ஆள்கூறு

(ii) y இன் ஆள்கூறு

(iii) கோணம் α

9. வீட்டில் பயன்படுத்தப்படும் சுழல் தேங்காய்த் துருவி உருவில் காட்டப்பட்டுள்ளது. நான்கு வெட்டும் அலகுகள் கொண்ட தொகுதி அதில் பொருத்தப்பட்டுள்ளதெனக் கொள்க.



(a) (i) வளைவான வெட்டு அலகைத் (A) தயாரிப்பதற்கான உற்பத்திச் செயன்முறைகள் **மூன்றைப்** பட்டியலிடுக.

(ii) வெட்டு அலகுத் தொகுதியைத் தயாரிப்பதற்குப் பொருத்தமான திரவியம் யாது?

(iii) மேலே குறிப்பிட்ட திரவியப் பயன்பாடு பொருத்தமாக அமைவதற்கான **இரண்டு** காரணங்களைக் குறிப்பிடுக.

Download Marking Schemes at : www.freebooks.lk

(b) பின்வரும் பகுதிகளைத் தயாரிப்பதற்கான உற்பத்திச் செயன்முறைகள் ஒவ்வொன்றைக் குறிப்பிடுக.

(i) அச்சு ஏற்றி (B) யின் புறக்குழாய்

(ii) கைக்கோல் (C)

(iii) மரத்தினாலான கைப்பிடி (D)

(iv) திருகு இறுக்கி (F)

(c) அச்சு ஏற்றியின் (B) இரண்டு புறங்களிலும் குண்டுப் போதிகைகள் பொருத்தப்பட்டுள்ளன. இவ்வாறு குண்டுப் போதிகைகளை இடுவதன் நோக்கங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(d) பொதுவாக இந்தத் துருவலகைப் பயன்படுத்தும் ஒருவர் கைப்பிடியில் சராசரியாக 120 N தொடுகை விசையை உஞற்றி 125 rmp உடன் சுழலச் செய்கிறார் எனக் கொள்க. வெட்டு அலகுகளின் அச்சு, மற்றும் மரக்கைபிடி அந்தம் ஆகியவற்றுக்கு இடையிலான தூரம் 15 cm ஆயின்,

(i) தேங்காய் துருவுவதற்குத் தேவையான சராசரி முறுக்கத்தைக் கணிக்க.

(ii) இந்த வேகத்துக்குத் தேவையான வலுவைக் கணிக்க.

10. மாணவர் செயற்றிட்டமொன்றிற்காக தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நீர்ப்பாரமானியின் திட்ட வரைபடம் கீழே காட்டப்பட்டுள்ளது. P இல் நிலவும் இழிவு அமுக்கத்தில் நீர்நிரலின் உச்ச உயரமான h இனைத் தாங்கிக் கொள்ளக்கூடியவாறான உயரம் கொண்ட ஊடுகாட்டும் கண்ணாடிக் குழாய் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. முகவையிலுள்ள நீர்மட்ட உயரத்தை இறைகுழாய் மூலம் குறைக்க முடியும்.



(a) இந்தச் செயற்றிட்டம் வெற்றிகரமாக அமைவதற்கென கண்ணாடிக் குழாயில் சரியான நீர் மட்டத்தைப் பேணுவதற்கு வெற்றிடப் பம்பியில் தேவைப்படும் இழிவு அமுக்கம் எவ்வளவாக அமைய வேண்டும்?

(b) (i) நீர்நிரலின் உயரம் h இல், ஊடுகாட்டும் குழாயின் விட்டம் d இன் செல்வாக்கினை விளக்குக.

(ii) நீர்நிரலின் உயரத்தினால் சுட்டப்படும் அமுக்கம் தனியமுக்கமா அல்லது மானி (gauge) அமுக்கமா?

(c) உங்களிடம் வெற்றிடப் பம்பி இல்லையெனில், புள்ளி P இல் இழிவு அமுக்கத்தைப் பேணுவதற்கான முறையொன்றைப் பிரேரிக்குக. (உங்கள் விருப்பத்துக்கமைய முகவையின் உயரத்தைத் தெரிவு செய்யலாம் எனக் கொள்க.)

(d) புள்ளி P இல் அமுக்கத்தை மாறிலியாகப் பேணியவாறு, முகவையிலுள்ள நீர்மட்டம் குறைக்கப்படின் நீர்நிரல் h இல் ஏற்படும் மாற்றங்களை விளக்குக.

(e) பாரமானித் திரவமாக இரசத்தைப் பயன்படுத்துவதன் அனுகூலங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக.

* * *

Download Marking Schemes at : www.freebooks.lk

29 - பகுதி II

பகுதி B

5. கொவிட்- 19 என்பது அண்மைக்காலமாக முழு உலகிற்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள தொற்று நிலைமையாகும். இத்தொற்றுக் காலப்பகுதியில் வைரசின் பரவுதலைத் தடுப்பதற்கென பல்வேறு வகைப்பட்ட தொழினுட்ப, தொழினுட்பம் சாரா படிமுறைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(*a*) கொவிட்- 19 பரவலைத் தடுப்பதற்கு சமூக இடைவெளியைப் பேணுதலை எவ்வாறு பயன்படுத்தலாமெனச் சுருக்கமாக விளக்குக?

- மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்தல்
- தனியாள் இடைவெளி 1m இலும் அதிகமாகப் பேணுதல்
- தொற்றுக்குள்ளானோரையும், அவர்களை நெருங்கியோரையும் தனிமைப்படுத்தல்
- பொதுப் போக்குவரத்து சேவைகளில் உரிய ஆசனங்களில் அரைவாசி எண்ணிக்கையிலும் குறைந்தளவான எண்ணிக்கையில் பயணிகளை கொண்டு செல்லல்.

இவ்வாறான யாதேனும் இரு காரணங்களை குறிப்பிடுவதன் மூலம் விளக்குதல்.

(50 புள்ளிகள்)

(*b*) வைரசுப் பரவலைத் தவிர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட தொழினுட்பம் சாராத வேறு முறைகள் இரண்டைச் சுருக்கமாக விளக்குக.

- பாதுகாப்பான முகக் கவசங்கள் அணிதல்
- சமூகத்தில் நடமாடிய பின்னர் வீடு நுழையும்போது ஆடைகளை மாற்றி சுத்தமாதல்
- முகம், மூக்கு, கண் போன்ற உறுப்புக்களைக் கைகளால் துடைப்பதைத் தவிர்த்தல்
- நுகர்வுப் பாத்திரங்களை இயன்றளவு தனியார் பாவனையாகப் பேணுதல்
- காற்றுப் பரிமாற்றம் இல்லாத வளிக்குளிறேற்றி உள்ள அறைகளில் மக்கள் கூட்டமாக ஒன்று கூடாமை

போன்ற பொருத்தமான காரணங்களை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குதல்.

(20 x 2 = 40 புள்ளிகள்)

Download Marking Schemes at : www.freebooks.lk

(*c*) வைரசுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்தக்கூடிய நவீன தொழினுட்பப் பிரயோகங்கள் **மூன்றை** விவரிக்குக.

- கிருமிகளை அழிக்கக்கூடிய மெய்நலம்பாட்டு திரவங்களின் மூலம் அடிக்கடி கைகளை சுத்தப்படுத்தல்
- பொது இடங்களில் அமைந்திருக்கும் நீர்த்திருகுபிடிகளை தன்னியக்கமாக தொழிற்படுத்தல்
- சுகாதாரப் பாதுகாப்புடையதும் கிருமிகளை அழிக்கக்கூடியதுமான திரவங்களைத் தெளிக்கும் அறையினூடாக வேலைத்தளங்களுக்கு நுழைய வழியேற்படுத்தல்.
- நோயுற்றோரைக் கண்காணிப்பதற்காக தெமாலைவிலிருந்து கட்டுப்படுத்தக்கூடிய ரொபோக்களைப் பயன்படுத்தல்
- கிருமிகளை அழிக்கக்கூடிய கதிர்த் தொழிற்பாட்டு அறையினுள்ளாக பயனிக்க வழிவகுத்தல்.

போன்ற பொருத்தமான மூன்று காரணங்களை சுருக்கமாக விளக்குதல்.

(20 x 3 = 60 புள்ளிகள்)

150

6. இலங்கையில் கலப்பு சக்தி வலு வழங்கலில் மீளப்புதுப்பிக்கத்தக்க சக்திவலு வழங்கும் கூறுகளை அதிகரிப்பதற்கென ஞாயிற்று வோல்ற்றுப் பிறப்பாக்கி நிலையங்கள் (Solar PV Plants) விருத்தி செய்யப்படுகின்றன. ஞாயிற்று ஒளிவலுப் பிறப்பாக்கி நிலையங்களில் குறைவான கொள்ளளவு கொண்ட அனேக எண்ணிக்கையான ஞாயிற்றுப் படல் அலகுகள் ஒன்றுடனொன்று இணைக்கப்பட்டிருக்கும். ஒளிர்வு வோல்ற்று மொடியூலொன்றின் பயப்பு வோல்ற்றளவானது, கிடைக்கும் சூரியஒளியின் அளவில் தங்கியிருக்கும். மொடியூலொன்று பெயரளவு வலுவையும் உச்ச பயப்பு வோல்ற்றளவையும் கொண்டிருக்கும். தேவையான மின்னோட்ட, வோல்ற்றளவுப் பயப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கு இந்த அலகுகள் தொடராகவோ சமாந்தரமாகவோ இணைக்கப்படலாம். ஞாயிற்று மொடியூல்கள் பலவற்றின் பயப்பு நேரோட்டம், ஆடலோட்டமாக மாற்றப்படும் மாற்றியுடன் தொடுக்கப்பட்டு பின்னர் நிலைமாற்றியினால் உரிய நெய்யரி வோல்ற்றளவுக்கு மாற்றப்படும். (கீழே தரப்பட்ட விவரப்படத்தைக் கருதுக.)



சூரிய ஒளிர்வு வோல்ற்றளவு மொடியூலொன்றின் தரவு (ஒரு அலகுக்கானது)
வலு: 200 W
வோல்ற்றளவு V_{max} : 50 V

(*a*) 50KW ஞாயிற்று ஒளிர்வு வோல்ற்றுப் பிறப்பாக்கல் நிலையத்துக்குப் பயன்படுத்தப்பட வேண்டிய ஞாயிற்றுப் படல்களின் எண்ணிக்கையைக் கணிக்க.

படல் ஒன்றின் பெய்ப்பு வலு = 200 W

தேவையான வலு அளவு = 50 KW = 50,000 W

$\therefore$ தேவையான படங்களின் எண்ணிக்கை $= \frac{50,000}{200} = 250$

(30 புள்ளிகள்)

Download Marking Schemes at : www.freebooks.lk

(*b*) ஞாயிற்று ஒளிர்வு வோல்ற்று அலகொன்றின் அகலம், நீளம் ஆகியன முறையே 34", 52" எனக் கொண்டு இந்த வலு பிறப்பாக்கல் நிலையத்தை நிறுவத் தேவையான மொத்தப் பரப்பளவைக் கணிக்க.

படல் ஒன்றின் பரப்பளவு	= 34" × 52"
250 படல்களின் பரப்பளவு	= 34" × 52" × 250 சதுர அங்குலம்
அல்லது	= (34" × 52" × 250 / 144) சதுர அடிகள்

(30 புள்ளிகள்)

(*c*) நேரோட்டத்தை ஆடலோட்டமாக மாற்றீடு செய்யும் மாற்றிக்கு 500 V நேரோட்ட மின்னழுத்தம் தேவையாகும். தரப்பட்ட ஒளி வோல்ற்றளவு (PV) மொடியூலின் மூலம் தேவைப்படும் நேரோட்ட வோல்ற்றளவைப் பெறுவதற்கான முறையைப் பிரேரிக்க

படல் ஒன்றின் வோல்ற்றளவு = 50V

500V ஐப் பெற்றுக்கொள்ளத் தேவையான கலங்களின் எண்ணிக்கை $= \frac{500\text{ v}}{50\text{v}}$

$= 10$

500V தொடராகத் தொடுக்கக்கூடிய கலங்களின் மொத்த எண்ணிக்கை $= \frac{250\text{ v}}{10\text{v}} = 25$

(25 புள்ளிகள்)

(*d*) பிரதான நெய்யரியிலிருந்து இரவில் மின் கிடைக்காத சந்தர்ப்பத்தில் சூரியவலுப் பிறப்பாக்கியின் மூலம் மின் வழுங்கலை மேற்கொள்ளக் கூடிய முறையொன்றைப் பிரேரிக்க.

மின்கலத் தொகுதியானது பகற்காலங்களில் ஏற்றமடைந்து பின் இரவு வேளைகளில் அம் மின்கலத்தினால் பெறப்படும் மின்சாரம் நேர் மாற்றியின் மூலமாக தேவையான ஆடல் மின்னோட்டமாக மாற்றப்பட்டு பயன்படுத்தப்படும்.

(25 புள்ளிகள்)

(*e*) ஞாயிற்று ஒளிர்வு வோல்ற்றுப் பிறப்பாக்கி நிலையங்கள் மூலம் இலங்கைக்குக் கிடைக்கும் நன்மைகள் இரண்டை விவரிக்குக.

- வெப்ப, டீசல் மின்வலு உற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான எரிபொருளுக்குப் பதிலாக செலவிடப்படும் அன்னியச் செலவாணியை சேமிக்க முடியுமாதல்.
- வெப்ப, டீசல் மின்வலு நிலையங்கள் மூலம் வெளியாகும் வாயு ஶ்ரீழல் மாசடையக் காரணமாக அமைவதுடன், சூழியக் கலங்களால் ஶ்ரீழல் மாசடையாமை.
- அலகொன்றுக்கான உற்பத்திச் செலவு குறைதல்.
- பராமரித்தல் இலகுவாதல்
- வீழ்வது குறைவடையும்

போன்ற பொருத்தமான 2 விடைகளுக்கு **(20 x 2 = 40 புள்ளிகள்)**

150

Download Marking Schemes at : www.freebooks.lk

7. இலங்கையில் பிளாத்திக்குக் கழிவுகளின் உற்பத்தி மற்றும் அவை பாதுகாப்பற்ற முறையில் அகற்றப்படுதல் ஆகியன பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. நாம் உணவுகளைப் பொதியிடவெனப் பாதுகாப்பான பிளாத்திக்குப் பதார்த்தங்களைப் பயன்படுத்துகின்ற போதும் அவற்றிலுள்ள பொலிகாபனேற்றுச் சேர்வைகள், கட்டுப்பாடற்ற வகையில் கழிவுகள் குவிக்கப்படும் இடங்களில் அபாயமான இரசாயனப் பதார்த்தங்களுடன் பிணைப்பில் ஈடுபடக்கூடிய தன்மையைக் கொண்டுள்ளன. அவற்றிலிருந்து உருவாகும் திரவப் பதார்த்தங்கள் மற்றும் நுண் பிளாத்திக்குகள் ஆகியன கழுவியெடுத்து வரப்பட்டு நிலக்கீழ் நீர்மூலங்களையும் கடல் சூழலையும் மாசடையச் செய்கின்றன. இந்த மாசுக்கள் உணவுச் சங்கிலிகளினூடாக மனிதனையும் பிற விலங்குகளையும் சென்றடையலாம்.

1988ஆம் ஆண்டில் பிளாத்திக்குக் கைத்தொழில்துறை மூலமாகத் தயாரிக்கப்பட்ட வகைப்படுத்தல் முறைமை வருமாறு

பிளாத்திக்குப் பதார்த்தங்களிலுள்ள மீள்சுழற்சிக் குறியீடுகள் குறிப்பன யாவை?



http://nowsaveouplanet.blogspot.com/2015/07
/what-types-of-plastics-can-be-recycled.html

ஒவ்வொரு பிளாத்திக்கு வகையினதும் மீள்சுழற்சி செய்யக்கூடிய விகிதம், இலக்க அதிகரிப்புடன் குறையும். இது பயன்பாடு, சேகரிப்பு, தொழினுட்பம், கையாளலுக்கான செலவு ஆகியவற்றில் தங்கியிருக்கும். இவ்வாறு ஒவ்வொரு வகையினதும் மீள்சுழற்சி செய்யப்பட்ட விளைவுகள் வேறு உற்பத்திகளுக்கான மூலப்பொருட்களாகப் பயன்படுத்தப்பட வேண்டும். விருத்தியடைந்த நாடுகளில் இந்த ஒவ்வொரு வகையினதும் மீள்சுழற்சி வீதம் ஏறத்தாழ 20-40% ஆகும். சிறுபகுதி எரியூட்டப்பட்டு சக்தி பிறப்பிக்கப்படுவதுடன் பெரும்பகுதி கட்டுப்பாடற்ற நிலநிரப்பலுக்குப் (land fill) பயன்படுத்தப்படும் அல்லது கடலில் சேர்க்கப்படும்.

(i) மேற்குறித்த வகைப்படுத்தலின் அடிப்படையில் உங்களது உள்ளூராட்சிச் சபைப் (பிரதேச சபை / நகர சபை / மாநகர சபை) பிரதேசத்தில் உருவாகும் வெவ்வேறான கழிவுகளை வகைப்படுத்துக.

பாரம்பரிய கழிவுகளை வகைப்படுத்தலை விடவும், மீள்சுழற்சி செய்வதற்காக பிளாஸ்திக்குகளை வகைப்படுத்தும் போது அதன் பொருட்களின் வகைக்கேற்ப வகைப்படுத்தலும் அதற்காக பிளாஸ்திக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கங்களைக் கண்டறிந்து வேறு பிரித்தல் மற்றும் அவ்வாறு இனங்காண முடியாத பிளாஸ்திக்குகளை வேறாக சேகரித்தல் மற்றும் திட்டமிடல் பற்றிய விளக்கம் இருப்பின்

(30 புள்ளிகள்)

Download Marking Schemes at : www.freebooks.lk

(ii) இந்த ஒவ்வொரு கழிவையும் கையாளும் விதம் பற்றி உங்களது உள்ளூராட்சிச் சபைக்குப் பிரேரிக்குக. அவ்வவ் பிரேரணைகளை நடைமுறைப்படுத்துவதால் சமூகத்துக்கு செலவின ரீதியாக ஏற்படக்கூடிய தாக்கங்களை இனங்காண்க.

- அகற்றப்படும் உணவுகள், காய்கறிகள், பழவகைகள் போன்றவற்றை சேகரித்து வீட்டிலேயே கொம்போஸ் கூட்டு பசளை தயாரிப்பதற்கான வசதிகளை ஏற்பாடு செய்து கொடுக்க, பிரதேச அரச கடைகள் செயற்படல்.
- கடதாசி, கடதாசி மட்டை போன்றவற்றை வெவ்வேறாக சேகரித்து அவற்றை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைகளுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.
- பிளாஸ்திக்குகளை வெவ்வேறாக வகைப்படுத்தலும் சேகரித்தலும், அவற்றை சுத்தம் செய்து மீள்சுழற்சி செய்யக்கூடிய மூலப்பொருள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை நிறுவுதலும்.
- வியாபார நிலையங்களில் வெளியேற்றப்படும் காய்கறிகள், பழவகைகள் போன்றவற்றை கூட்டுப் பசளை தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்தல்.

இவ்வாறான யாதேனும் பொருத்தமான 03 காரணங்களைக் குறிப்பிட்டு மக்கள் பெறக்கூடிய வருமானங்கள் பற்றி விளக்குதல்.

(20 x 3 = 60 புள்ளிகள்)

(ii) இந்த ஒவ்வொரு கழிவையும் கையாளும் விதம் பற்றி உங்களது உள்ளூராட்சிச் சபைக்குப் பிரேரிக்குக. அவ்வவ் பிரேரணைகளை நடைமுறைப்படுத்துவதால் சமூகத்துக்கு செலவின ரீதியாக ஏற்படக்கூடிய தாக்கங்களை இனங்காண்க.

- இயற்கை மூலப்பொருட்களால் உருவாக்கப்பட்ட பயணப் பைகள், கடதாசியால் ஆக்கப்பட்ட அளக்கைக் குறியவைகளை கவர்ச்சியானதாகவும் நீண்டகாலம் பயன்படுத்தக்கூடியவாறும் உற்பத்தி செய்யும் தொழினுட்பத்தின் கிரயத்தில் ஒரு சிறு தொகையை உற்பத்தியாளருக்குப் பெற்றுக்கொடுத்தல்.
- பிளாஸ்திக்கு பிரயோகத்தின் போதான தீய விளைவுகளை விளக்கும் வகையிலான பாடசாலை மட்டப் போட்டிகளை நடாத்துதல் மற்றும் அதன் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- வீசப்படும் பிளாஸ்திக்குப் பொருட்களை சேகரித்து அவற்றின் பெறுமதிக்குரிய மாற்றுப் பொருட்களை தயாரித்து அதனை மக்களுக்குக் கொடுத்தல்.

இவ்வாறான 3 காரணங்கள்

(20 x 3 = 60 புள்ளிகள்)

150

Download Marking Schemes at : www.freebooks.lk

பகுதி C

8. வாகனத் தயாரிப்புச் செயன்முறையை தன்னியக்கமயப்படுத்துவதற்கென, வாகனத் தயாரிப்புத் தொழிற்சாலைகளில் றோபோக்கள் பயன்படுத்தப்படுகின்றன. வாகன உற்பத்தித் தொழிற்சாலையொன்றில் வேலையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தனித்தளத்தில் மட்டும் செயற்படும் அவ்வாறான றோபோ ஒன்று உருவில் காட்டப்பட்டுள்ளது. அது a_1, a_2, a_3 ஆகிய நீளங்களையுடைய மூன்று இணைப்புக்களைக் (Links) கொண்டுள்ளது. தரப்பட்டுள்ள கொண்ணிலையில் மூட்டுகளின் கோணங்கள் θ_1, θ_2, θ_3 ஆகும்.



(a) வாகனத் தயாரிப்புத் தொழிற்சாலையொன்றில் தன்னியக்கமயப்படுத்தப்படக் கூடிய உற்பத்திச் செயன்முறைகள் **மூன்றைக்** குறிப்பிடுக.

- உடற்பகுதிகளை (கதவுச் சிறகு, பொனட், டிக்கித் தகடு) உருவாக்கும் போது தகட்டைப் பகுதிகளாக்குதலும், வடிவமைத்தலும்
- மூல வடிவத்துக்கு வார்ப்புச் செய்த எஞ்சின் உடலில் துளைத்தல், உச்சி அடி என்பவற்றை முகமிடல் செய்து மட்டமாக்கிக் கொள்ளல்.
- உயற்பகுதிகளை ஒன்று சேர்த்துக்கொள்வதற்காக காய்ச்சியிணைத்தல் செயற்பாடு மேற்கொள்ளல்.
- உடல் மீது பாதுகாப்புப் பூச்சுப் பூசுதல் மற்றும் நிறப் பூச்சிடல்.

போன்ற பொருத்தமான மூன்று காரணங்களிற்கு

(20 x 3 = 60 புள்ளிகள்)

(b) வாகனத் தயாரிப்புச் செயன்முறையைத் தன்னியக்கமயப்படுத்துவதால் கிடைக்கும் அனுகூலங்கள் **மூன்றைச்** சுருக்கமாக விளக்குக.

- உற்பத்தியாக்கும் வேலைப் பகுதிகளின் நிலையமைப்பினை இலகுவாகப் பேணுதல்.
- உற்பத்தியாகும் வீதத்தை அதிகரிக்க முடியுமாயிருத்தல்.
- தன்னியக்கமாக தொழிற்படக்கூடிய கணணிமயப்படுத்தப்பட்ட திட்டங்களைப் பிரயோகிப்பதன் மூலம் இலகுவாக உற்பத்தியில் மாற்றங்களைச் செய்து கொள்ள முடியுமாதல்.
- வேலை செய்யும் நேரம் தொடர்பாக சிக்கல்கள் ஏற்படமாட்டாது.

Download Marking Schemes at : www.freebooks.lk

- கைகளால் செய்வதற்குக் கடினமான வேலைகளை இலகுவாக செய்ய முடியுமாதல்.
- உற்பத்திக்கான அலகு கிரயத்தைக் குறைத்துக் கொள்ள முடியுமாதல்.

பொருத்தமான மூன்று விடைகளுக்கு

(20 x 3 = 60 புள்ளிகள்)

(c) தரப்பட்ட நீளங்கள், கோணங்கள் ஆகியவற்றுக்கமைய தனித்தளத்தில் செயற்படும் ரோபோவின் விளைவாக்கி அந்தத்தின் (End effector) பின்வரும் மாறிகளைத் துணிக.

(i) x இன் ஆள்கூறு

(ii) y இன் ஆள்கூறு

(iii) கோணம் α

- $X = a_1 \cos \omega_1 + a_2 \cos(\omega_1 + \omega_2) + a_3 \cos(\omega_1 + \omega_2 + \omega_3)$
- $Y = a_1 \sin \omega_1 + a_2 \sin(\omega_1 + \omega_2) + a_3 \sin(\omega_1 + \omega_2 + \omega_3)$
- $X = \omega_1 + \omega_2 + \omega_3$

(10 x 3 = 30 புள்ளிகள்)

150

9. வீட்டில் பயன்படுத்தப்படும் சுழல் தேங்காய்த் துருவி உருவில் காட்டப்பட்டுள்ளது. நான்கு வெட்டும் அலகுகள் கொண்ட தொகுதி அதில் பொருத்தப்பட்டுள்ளதெனக் கொள்க.



(a) (i) வளைவான வெட்டு அலகைத் (A) தயாரிப்பதற்கான உற்பத்திச் செயன்முறைகள் மூன்றைப் பட்டியலிடுக.

- தளத்தை நிர்மாணிப்பதற்காக தகட்டினை அவசியமான அளவீடுகளுக்கு ஏற்ப குறித்துக் கொள்ளலும் அதன்படி வெட்டிக் கொள்ளலும்.
- தகட்டின் பகுதிகளை அச்சுத் தட்டுடன் உருக்கி ஒட்டுதல். (பகுதி A ஐ மத்தியிலுள்ள தண்டுடன் காய்ச்சி ஒட்டுதல்)
- பற்களை ஒழுங்குபடுத்தல், இதற்காக முடிப்புக் கருவி ஒன்றினை உபயோகித்தல்

பொருத்தமான உற்பத்திச் செயற்பாடுகள் மூன்றை குறிப்பிடல்

(10 x 3 = 30 புள்ளிகள்)

Download Marking Schemes at : www.freebooks.lk

(ii) வெட்டு அலகுத் தொகுதியைத் தயாரிப்பதற்குப் பொருத்தமான திரவியம் யாது?

துருப்பிடிக்காத உருக்குத் தகடு அல்லது அதிகாபன் உருக்குத் தகடு

(10 புள்ளிகள்)

(iii) மேலே குறிப்பிட்ட திரவியப் பயன்பாடு பொருத்தமாக அமைவதற்கான இரண்டு காரணங்களைக் குறிப்பிடுக.

குறைந்தளவு துருப்பிடிக்கும் இயல்புடையதாதலால் உணவு தயாரிப்பதற்குப் பொருத்தமானதாகும்.

வன்மை அதிகமானதால் வெட்டும் அலகின் பற்களில் இலகுவான கூர்மையமாக்கல், நீண்டகால பாவனை இவ்வாறான பொருத்தமான இரு விடைகளுக்கு

(10 x 2 = 20 புள்ளிகள்)

(b) பின்வரும் பகுதிகளைத் தயாரிப்பதற்கான உற்பத்திச் செயன்முறைகள் ஒவ்வொன்றைக் குறிப்பிடுக.
(i) அச்சு ஏற்றி (*B*) யின் புறக்குழாய்
(ii) கைக்கோல் (*C*)
(iii) மரத்தினாலான கைப்பிடி (*D*)
(iv) திருகு இறுக்கி (*F*)

(i) பொருத்தமான விட்டமுடைய மென்னுருக்குக் குழாய் உறிய நீளத்தில் வெட்டி வேறாக்கிக் கொள்ளல்.

(ii) கைத்தண்டுக்காக பொருத்தமாக குறுக்குவெட்டு உடைய மென் உருக்குக் கோலின் ஒரு முனையில் அச்சுத் தண்டு பொருத்துவதற்கு இயலுமாறு பொருத்தமான விட்டத்தில் துளையொன்றைத் துளைத்துக் கொள்ளல் அல்லது பொருத்தமான யாதேனும் விடை

(iii) பொருத்தமான உரிய விட்டத்தில் மரத்திலான தண்டின் மையத்தில் துளைத்துக் கொள்ளுதல். தேவையான வடிவத்துக்கு கடைந்து கொள்ளுதல்.

(iv) உருட்டுவதன் மூலமாக புரிகளை ஒழுங்கு செய்தல் சுரையுடன் பொருந்தக்கூடியவாறான அமன்னுருக்குத் தண்டு மூலம் புரிகளை வெட்டுதல்

அல்லது பொருத்தமான விடைகளுக்கு புள்ளிகளை வழங்கவும்

(10 x 4 = 40 புள்ளிகள்)

Download Marking Schemes at : www.freebooks.lk

(c) அச்சு ஏற்றியின் (*B*) இரண்டு புறங்களிலும் குண்டுப் போதிகைகள் பொருத்தப்பட்டுள்ளன. இவ்வாறு குண்டுப் போதிகைகளை இடுவதன் நோக்கங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

- தொழிற்பாட்டுச் சந்தர்ப்பத்தின்போது சுமையைத் தாங்குதல்
- திருப்பும், அச்சுத் தண்டுகளுக்கிடையிலான உராய்வினைக் குறைத்துக் கொள்வதன் மூலம் வேலையை இலகுவாக்கிக் கொள்ளுதல்.
- பகுதிகள் (திருப்பும், அச்சுத்தண்டு) ஒன்றுடன் ஒன்று தேய்த்து சீர்ப்படுத்தும் போது ஏற்படுத்தக்கூடிய சத்தத்தை தவிர்த்தல்.
- நீண்டகாலம் பயன்படுத்தலாம்.

இவ்வாறான பொருத்தமான விடைகள் இரண்டிற்கு

(20 புள்ளிகள்)

(d) பொதுவாக இந்தத் துருவலகைப் பயன்படுத்தும் ஒருவர் கைப்பிடியில் சராசரியாக 120 N தொடுகை விசையை உஞற்றி 125 rmp உடன் சுழலச் செய்கிறார் எனக் கொள்க. வெட்டு அலகுகளின் அச்சு, மற்றும் மரக்கைபிடி அந்தம் ஆகியவற்றுக்கு இடையிலான தூரம் 15 cm ஆயின்,
 (i) தேங்காய் துருவுவதற்குத் தேவையான சராசரி முறுக்கத்தைக் கணிக்க.
 (ii) இந்த வேகத்துக்குத் தேவையான வலுவைக் கணிக்க.

(i) முறுக்கம் = கைத்தண்டின் நீளம் × தொடுகைக் குறி

$$= \frac{15\text{m}}{100} \times 120\text{N}$$

$$= 18 \text{ NM}$$

(10 புள்ளிகள்)

(ii) வலு = முறுக்கம் × 2 π × சுழற்சிக் கதி

$$= 18 \times 2\pi \times \frac{125}{60} \text{rps}$$

$$= 75\pi \text{ W}$$

(20 புள்ளிகள்)

Download Marking Schemes at : www.freebooks.lk

10. மாணவர் செயற்றிட்டமொன்றிற்காக தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நீர்ப்பாரமானியின் திட்ட வரைபடம் கீழே காட்டப்பட்டுள்ளது. *P* இல் நிலவும் இழிவு அமுக்கத்தில் நீர்நிரலின் உச்ச உயரமான *h* இனைத் தாங்கிக் கொள்ளக்கூடியவாறான உயரம் கொண்ட ஊடுகாட்டும் கண்ணாடிக் குழாய் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. முகவையிலுள்ள நீர்மட்ட உயரத்தை இறைகுழாய் மூலம் குறைக்க முடியும்.



(*a*) இந்தச் செயற்றிட்டம் வெற்றிகரமாக அமைவதற்கென கண்ணாடிக் குழாயில் சரியான நீர் மட்டத்தைப் பேணுவதற்கு வெற்றிடப் பம்பியில் தேவைப்படும் இழிவு அமுக்கம் எவ்வளவாக அமைய வேண்டும்?

வெற்றிடப் பம்பியின் தாழ் அமுக்கம் (வளிமண்டலம்)

(20 புள்ளிகள்)

(*b*) (i) நீர்நிரலின் உயரம் *h* இல், ஊடுகாட்டும் குழாயின் விட்டம் *d* இன் செல்வாக்கினை விளக்குக.
(ii) நீர்நிரலின் உயரத்தினால் சுட்டப்படும் அமுக்கம் தனியமுக்கமா அல்லது மானி (gauge) அமுக்கமா?

(i) நீர்த் தரையின் உயரம் காரணமாக உருவாகும் அமுக்கம் மீது ன யில் தாக்கம் ஏற்படமாட்டாது. எனும் கோவை மூலம் பெறப்படும்.

(15 புள்ளிகள்)

(ii) தனியமுக்கம்

(15 புள்ளிகள்)

(*c*) உங்களிடம் வெற்றிடப் பம்பி இல்லையெனில், புள்ளி *P* இல் இழிவு அமுக்கத்தைப் பேணுவதற்கான முறையொன்றைப் பிரேரிக்குக. (உங்கள் விருப்பத்துக்கமைய முகவையின் உயரத்தைத் தெரிவு செய்யலாம் எனக் கொள்க.)

முகவையினுள் குழாயை அமிழ்த்தி முழு அளவையும் நீரினால் நிரப்பி மேல் அந்தத்தினுள் வளி உட்புகாதவாறு மூடி பின் முகவையில் நீர் அகற்றப்படும். ° இனில் வெற்று இடைவெளியொன்று (குழாயின் மேல் அந்தம்) பெறப்படும் வரை நீரை அகற்றும் போது p யில் குறைந்த அமுக்கம் பெறப்படும்.

(20 புள்ளிகள்)

Download Marking Schemes at : www.freebooks.lk

(*d*) புள்ளி *P* இல் அமுக்கத்தை மாறிலியாகப் பேணியவாறு, முகவையிலுள்ள நீர்மட்டம் குறைக்கப்படின் நீர்நிரல் *h* இல் ஏற்படும் மாற்றங்களை விளக்குக.

h மாற்றமடையாது

(20 புள்ளிகள்)

(*e*) பாரமானித் திரவமாக இரசத்தைப் பயன்படுத்துவதன் அனுகூலங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக.

- நீர்த்தனல் $h = 10\ m$ எனில் அது சார்பாக இரச நிரலில் உயரம் ஆகக் குறைவடைதல் பாரமானி உருவாக்குவதை இலகுவாக்கும்.
- நீர் ஆவியாவதனால் குழாயில் மேல் இடைவெளியில் நீராவி பரவுவதால் உண்மையான அமுக்கம் பெறப்படமாட்டாது.
- இரசம் ஆவிப்பரப்பற்றதாகையால் அதன் மூலம் உண்மையான அமுக்கம் பெறப்படும்.
- இரசம் மயிர்த்துளைத் தன்மையுடையதாகையால் உயரத்தை அளவிடுவது இலகுவாகும். இவ்வாறான பொருத்தமான 3 விடைகளுக்கு

(20 x 3 = 60 புள்ளிகள்)

150

❋❋❋❋❋❋

Download Marking Schemes at : www.freebooks.lk

Dear students!

We have Past Papers and Answers (Marking Schemes), Model Papers and Note books for English, Tamil and Sinhala Medium).

Please visit :

www.freebooks.lk

or click on this page to vist our site!